செ.வெ.எண் 22 நாள்: 22.06.2020

## பெரம்பலூா் மாவட்டம்

## கொரோனா வைரஸ் பரிசோதனைக்கான பி.சி.ஆர். பரிசோதனை மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா இ.ஆ.ப. அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

அதன் விவரம் வருமாறு:

பெரம்பலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் கொரோனா வைரஸ் பரிசோதனைக்கான பி.சி.ஆர். பரிசோதனை மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா இ.ஆ.ப. அவர்கள் இன்று (22.06.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி பெரம்பலூர் மாவட்டத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட நபர்களை கண்டறிந்து அவர்களின் சளி மாதிரிகள் ஆய்விற்காக மற்ற மாவட்டங்களிலுள்ள ஆய்வகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இந்நடைமுறை நோய் தொற்றாளர்களை கண்டறிவதில் காலதாமதம் ஏற்பவதை தவிர்க்கும் வகையில், தமிழக அரசு பெரம்பலூர் மாவட்ட தலைமை மருத்துவமனையில் புதிதாக கொரோனா வைரஸ் பரிசோதனை ஆய்வகத்தை அமைக்க உத்தரவிட்டுள்ளதன் அடிப்படையில் அதற்கான ஆய்வு கருவிகள் அனைத்தும் பொருத்தும் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்மூலம் இனிவரும் நாட்களில் பெரம்பலூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனைகள் அனைத்தும் இவ்வாய்வகத்தின் மூலம் முடிவுகள் விரைவாக தெரிவிக்கப்பட்டு, நோயாளிகள் சிகிச்சைக்காக மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர். இதன் மூலம் பெரம்பலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுள்ள நோயாளிகள் மிக விரைவாக கண்டறியப்படுவதன் மூலம் மற்றவர்களுக்கும் நோய் பரவுவது தடுக்கப்படும். எனவே பொதுமக்கள் அனைவரும் சளி, காய்ச்சல், இருமல் உள்ளிட்ட அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் கொரோனா வைரஸ் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) மரு.திருமால், வருவாய் கோட்டாட்சியர் (பொ) திரு.சக்திவேல், கண்காணிப்பாளர் மரு. தருமலிங்கம், இருக்கை மருத்துவர் மரு. இராஜா உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.